மோசடி என்று சொன்னால்கூட, அரசியல் என்கிற அடைமொழி முன்னால் இருப்பதால், மோசடி என்பதன் வேகம் குறைந்து விட்டது என்பதான நான்காவது குறிப்பைத் தெரிவித்திருக் கிறார்கள். அவர்கள் இப்படி நான்கு குறிப்புக்களைச் சொல்லி யிருப்பதால், அவர்கள் சொல்லியபடி இருக்கிறதா இல்லையா என்று நானும் விதிகளைப் பார்த்து—நான் விதிகளை நுணுக்க மாகப் பார்க்கப்பட்டவன் என்பது எல்லோருக்கும் தெரிந்த காரியம்—திங்கட்கிழமை என்னுடைய முடிவை அறிவிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(i) இராமநாதபுரம் மேல் பகுதியை பஞ்சப் பிரதேசமாக அறிவித்தல்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : சபாநாயகர் அவர்களே, "இராம நாதபுரம் மாவட்டத்தில், மேல் பகுதியில் பருவமழை தவறியதால் அரசாங்கம் உடனடியாக இந்த மாவட்டத்தை பஞ்சப் பிரதேச மாக பிரகடனம் செய்து கட்டாயக் கொள்முதலை நிறுத்துவது பற்றி விவாதிக்க வேண்டி இச்சபையின் அலுவல்களை ஒற்றி வைக்கக் கோருகின்றேன்" என்ற தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்திற்கு, விதி 50, உள்விதி (8)-ன் படி, எனது இசைவைக் கொடுக்க மறுக்கிறேன்.

(ii) சிதம்பரம் வட்ட நிலச்சுவாந்தார்கள்—விவசாயக் கூலிகள் தகராறு.

* **திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன். "சட்டப் பேரவையின் விதிகளின் 42-வது பிரிவின்படி கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை விவாதிக்க இச்சபை யின் அலுவல்களை ஒத்திவைக்கக் கோருகிறேன் :—

தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் வட்ட எடையார் கிராமத்திலுள்ள நிலச்சுவாந்தார்களுக்கும் கூலி விவசா யிகளுக்கும் அறுவடைக் கூலி சம்பந்தமாக கடந்த 22—1—1968-ல் மாவட்ட கலெக்டர் முன்னால் ஏற்பட்ட ஒப்பந்தப்படி நிலச்சுவாந் தார்கள் கூலியைக் கொடுக்க மறுப்பதுடன், வெளியூர் ஆட்களை வைத்து போலீஸ் பந்தோபஸ்துடன் அறுவடை செய்து வருவது பற்றி விவாதிக்க".

இதைப் பற்றி இரண்டொரு வார்த்தைகளும் சொல்ல விரும்பு கிறேன். 22—1—1968-ம் தேதி எற்றுக்கொள்ளப்பட்ட கூலியைக் கொடுக்க, அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விவசாயிகள் டெபுடி தாசில்தார் அலுவலகத்தின் முன்னால் உண்ணு

1968 பிப்ரவரி 16] [திரு. சி. கோவிந்தராசன்]

விரதம் இருந்தார்கள். அதன் பேரில் அதிகாரிகள் தலையிட்டு வாக்குறுதி கொடுத்தார்கள், நிலச்சுவாந்தார்களை அந்தக் கூலியைக் கொடுக்கச் சொல்வதாக. ஆனால், நிலச்சுவாந்தார்கள் வெளியூர் ஆட்களைக் கொண்டு வந்து அறுவடை செய்கிறார்கள். அதன் காரணமாக பல விளைவுகள் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. அதன் பிற நிலச்சுவான்தார்கள், தங்களை மிரட்டினார்கள் என்கிற தவறான புகார்களைக் கொடுத்து, போலீசிலே சொல்லி 13 விவசாயிகளை ரிமாண்டில் வைத்திருக்கிறார்கள். உடனடியாக இந்த விஷயத்தில் சர்க்கார் தலையிட்டு, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானம் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்திற்கு உகந்த விதிகளுக்கு உட்பட்டது அல்ல என்பதைத் தெரிவிக்கிறேன். ஒரு பிரச்சினையை வலியுறுத்திச் சொல்லத்தான் இது பயன்படுகிறது. தொடர்ந்து நிலைமைகளைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். கடந்த மாதம் சிதம்பரம் தாலுகாவில் பல கிராமங்களில், கலெக்டர் செய்த உடன்பாட்டின்படி, மிராசுதார்களுக்கும், விவசாயிகளுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால், அவர்கள் இங்கே குறிப்பிடுவது போல, போலீசாரை வைத்து அறுவடை செய்தார்கள் என்றோ, அல்லது ஒரு பரபரப்பான சூழ்நிலை இருக்கிறது என்றோ சொல்வது சரியில்லை. 15 நிமிஷத்திற்கு முன்தான், நான் தென்னார்க்காடு கலெக்டரோடு தொடர்பு கொண்டு கேட்ட நேரத்திலே, அவர்கள் சொன்னார்கள், அங்கே சுமுகமான நிலைதான் இருக்கிறது என்றும், இரண்டு தரப்பாருக்கும் எந்த வேறுபாடும் ஏற்பட்டு, சட்டம் ஒழுங்கிற்கு ஊறுவராமல் பார்த்துக் கொள்ள இரண்டு போலீஸ்காரர்களை வைத்திருக்கிறது. அறுவடைசெய்ய பந்தோபஸ்துக்காக அல்ல, உள்ளூர், வெளியூர் விவசாயிகளைக் கொண்டு சுமுகமான முறையில் அறுவடை நடந்திருக்கிறது என்றும் அவர்கள் செய்தி அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் அன்றாட நடவடிக்கைகளில் ஒன்று இது. அரசாங்கம், விவசாயிகளிடமும், மிராசுதார்களிடமும், விவசாயத் தொழிலாளர்களிடமும் அக்கறை கொண்டவர்கள், அவர்களுடைய உரிமைகளைக் காப்பாற்ற கனம் அங்கத்தினரை விட அதிக அக்கறை கொண்டவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே இந்தச் சட்டசபையை ஒத்திவைக்க வேண்டிய அளவுக்கு முக்கியமானதல்ல இந்தத் தீர்மானம். இன்றைக் அங்கே சுமுகமான நிலைமை இருக்கிறது என்று 15 நிமிஷத்திற்கு முன்தான் கலெக்டர் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று சொல்லிக் கொண்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியம்தான் என்பதால், இதற்கு என்னுடைய இசைவு மறுக்கப்படுகிறது.